2026 மார்ச் மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 49/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18– ஆம் தேதி புதன்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW10 (LW11) – Dr.சுகந்தி |
| தகப்பனார் பெயர்: | இளங்கோவன் |
| ஊர்: | ஆண்டிபட்டி |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | அரசு மருத்துவர் |
| வயது : | 37 |

18.03.2026

(எதிரி Warrant மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்).

(சாட்சி அழைக்கப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் திருச்சி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் முதலாம் ஆண்டு முதுநிலை படிப்பு படித்து வருகிறேன். சம்பவ சமயம் கடந்த 30.11.2024ம் தேதி 68 வயது மதிக்கத்தக்க பாண்டி என்பவரை அவரது மனைவி வசந்தா என்பவர் சிகிச்சைக்காக தேனி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை தெரிந்த ஒரு ஆண் நபர் 30.11.2024ம் தேதி காலை 7.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து கத்தியால் தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம்

i). 4x2x2.5 c.m. குத்துக்காயம் இடதுப்பக்க நெஞ்சு பகுதியிலும்,

ii). 2x1x1 c.m கிழிந்தக்காயம் இடது இடுப்பு மேல் விலா எலும்பிலும்,

iii). 2x0.5 c.m இடதுப்பக்க வயிற்றுக்கு கீழ்பகுதி (Loin region)

அவரை உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை வழங்கினேன். அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவருக்கு சிகிச்சை அளித்து 08.12.2024ம் தேதி சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். அ.சா.ஆ.15–ன் பின்பகுதியில் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று சான்று அளித்துள்ளேன். அறுசை சிகிச்சை நிபுணரின் பரிந்துரையின்படி அவருக்கு Left Hemopneumothorax என்பதால் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கினேன். அந்த கருத்துரை **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. அன்றைய தினமே சுமார் 60 வயது மதிக்கத்தக்க வசந்தா என்பவர் காலை 9.21 மணிக்கு என்னிடம் சிகிச்சைக்காக தேனி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து வந்தார். அவரை தெரிந்த ஒரு ஆண் நபர் 30.11.2024ம் தேதி காலை 7.30 மணியளவில் தனது வீட்டில் வைத்து கத்தியால் தாக்கியதாக கூறினார். அவருக்கு ஏற்பட்ட காயம்

i). 4x2 c.m. வலதுப்பக்க கையில் சிராய்ப்புக்காயமும், தொடுவழிகாயம் இருந்தது.

அவர் வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார். அவருக்கு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. என்னிடம் காட்டப்படும் சா.பொ.1 கத்தியால் குத்தினால் பாண்டி மற்றும் வசந்தாவிற்கு மேற்கண்ட காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

4. அ.சா.ஆ.15 விபத்து பதிவேட்டில் தெரிந்த ஒரு நபர் குத்தியாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பாண்டி என்பவரை வசந்தா என்பவர் ஆஜர்படுத்தினார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வசந்தா என்பவரை பாண்டி என்பவர் ஆஜர்படுத்தினார் என்று வா.சா.ஆ.17ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இரண்டு விபத்து பதிவேடுகளிலும்

சுயநினைவுடன் இருந்ததா குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.15–ல் கத்தி குத்து காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.17–ல் வசந்தாவிற்கு குத்துக்காயம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பாண்டி என்பவர் ஆஞ்சியோபிளாஸ்ட் சிகிச்சை செய்யப்பட்டிருந்த விபரத்தை சிகிச்சையின்போது நான் தெரிந்து கொண்டேனா என்றால் ஞாபகமில்லை.

5. பாண்டி என்பவருக்கு ஏற்பட்ட காயம் இளநீர் சீவுவதற்கு பயன்படுத்திய அரிவாளால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் எந்த கூர்மையான ஆயுதத்தால் தாக்கினாலும் குத்துக்காயம் ஏற்பட வாய்ப்புண்டு. பாண்டிக்கு ஏற்பட்ட 3 வது சிராய்ப்புக்காயம் கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். பாண்டி என்பவர் 08.12.2024 ம் தேதிவரை 9 நாட்கள் சிகிச்சைப் பெற்றார் என்று விடுவிப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வசந்தா என்பவர் உள்நோயாளியாக சிகிச்சை பெற விருப்பமில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார் என்றால் தேதி ஞாபகமில்லை. போலீசார் விசாரணையில் வசந்தா உள்நோயாளியாக சிசிக்சை பெற விருப்பமில்லை என்பதால் கருத்துரை கொடுக்க இயலாது என்று கூறியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. பாண்டிக்கு ஏற்பட்ட 1, 2 காயங்கள் ஒரே ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 18.03.2026 அன்று புதன்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.18 18:09:36 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
18.03.2026